தனி அலுவலர், புதுப்பாக்கம் ஊராட்சி / வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ), திருப்போரூர்
அவர்களின் நடவடிக்கைகள்
முன்னிலை - திரு.எம்.வெங்கட்ராகவன்.

ந.க.எண்.1582/2021/ஆ1 நாள்.07.09.2021

பொருள் - கட்டிட வரைபட அனுமதி - திருப்போரூர் ஊராட்சி ஒன்றியம் - புதுப்பாக்கம் ஊராட்சி மற்றும் கிராமம், M/s.Sylvanus Builders & Developers Ltd., என்ற நிறுவனத்தின் சர்வே எண்.198/1-ல், 1450ச.மீ பரப்புள்ள இடத்தில் தரைதளம் 383.34ச.மீ மற்றும் முதல்தளம் 393.03ச.மீ ஆகமொத்தம் 776.36ச.மீ (8357சதுரடி) பரப்பில் தொகுப்பு வீடுகள் கட்ட கட்டிட வரைபட அனுமதி வழங்கி உத்திரவிடுதல்.

பார்வை - 1.நகர் ஊரமைப்பு மண்டல துணை இயக்குநர், செங்கல்பட்டு மண்டலம் அவர்களின் ந.க.எண்.5411/19/செம3 நாள்.14.10.19.

2.நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.4367/19/ந.ஊ2 நாள்.24.09.2019.

3.துணை இயக்குநர் (பொ) / உறுப்பினர் செயலர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், செங்கல்பட்டு அவர்களின் ஓ.மு.எண்.1602/2021/மாஉதிகு, (செமா-5) நாள்.28.04.2021.

4.அரசாணை (நிலை) எண்.154, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை நாள்.13.10.2020.

5.அரசாணை (நிலை) எண்.18, நகராட்சி மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.04.02.2019 (ம) அரசாணை (நிலை) எண்.16, நகராட்சி மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.31.01.2020.

6.மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (மண்டலம் - 1) அவர்களின் கடிதம்.

7.புதுப்பாக்கம் ஊராட்சி மன்றத்தீர்மனம் எண்.102 நாள்.31.08.2021. பலவகை ரசீது எண்.2043 நாள்.31.08.2021

********

உத்தரவு -

திருப்போரூர் ஊராட்சி ஒன்றியம், புதுப்பாக்கம் ஊராட்சி மற்றும் கிராமம், M/s.Sylvanus Builders & Developers Ltd., என்ற நிறுவனத்தின் சர்வே எண்.198/1-ல், 1450ச.மீ பரப்புள்ள இடத்தில் தரைதளம் 383.34ச.மீ மற்றும் முதல்தளம் 393.03ச.மீ ஆகமொத்தம் 776.36ச.மீ (8357சதுரடி) பரப்பில் தொகுப்பு வீடுகள் கட்ட கீழ்கண்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டு கட்டிட வரைபட அனுமதி வழங்கி உத்தரவிடப்படுகிறது.

இந்த அனுமதியானது 07.09.2021 முதல் 06.09.2022 தேதி வரை ஒரு ஆண்டுக்கு செல்லுபடியாகும். அனுமதி கட்டணம் ரூ.59,749/- வங்கிவரைவாக புதுப்பாக்கம் ஊராட்சியில் செலுத்தப்பட்டு, அதன் ரசீது மற்றும் அங்கீகரிக்கப்பட்ட வரைபடங்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

கட்டிட தொழிளாலர் நலநிதி, ரூ.1,08,641/- யூனியன் பாங்க் ஆஃப் இந்தியா வங்கியில் சம்மந்தப்பட்ட கணக்கு எண்ணில் RTGS மூலமாக செலுத்தப்பட்டுள்ளது.

## நிபந்தனைகள்

1. பார்வை 2-ல் காணும் உறுப்பினர் செயலர்(பொ), மாமல்லபுரம் உள்ளூர்திட்டக்குழுமம், மாமல்லபுரம் அவர்களின் உத்தரவில் கொடுக்கப்பட்டுள்ள நிபந்தனைகள் அனைத்தும் பின்பற்ற வேண்டும்.
2. கட்டிடத்தின் முன் பக்கத்தில் 1.5 மீட்டருக்கு குறையாமலும் பின் பகுதியில் 1.5 மீட்டருக்கு குறையாமலும் இரு பக்கங்களிலும் 2 மீட்டருக்கு குறையாமலும் இடைவெளி விடப்பட்டிருக்க வேண்டும்.

Sylvanus Builders And Developers Ltd

Director / Authorised Signatory

3. தமிழ்நாடு ஊராட்சியின் 1994ம் ஆண்டு சட்டத்தின்படி சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழும விதிகளில் ஏற்படுத்தப்பட்டுள்ள எல்லா கட்டுப்பாடுகளுக்கும் உட்பட்டிருத்தல் வேண்டும்.

4. அரசாங்கத்திற்கு சொந்தமான இடங்களிலோ அல்லது இம்மனுதாரருக்கு சம்மந்தமில்லாத வேறு இடங்களிலோ ஆக்கிரமணம் செய்வது கூடாது.

5. கட்டிட வேலைகள் நடக்கும் பொழுதோ அல்லது வேறு எந்த நேரங்களிலோ ஊராட்சியிலிருந்து ஆய்வு செய்ய வரும் அதிகாரிகளுக்கு அங்கீகரிக்கப்பட்ட வரைபடங்களை காண்பிக்க வசதியாக வேலை நடக்குமிடங்களில் மேற்படி வரைபடங்களை வைத்திருத்தல் வேண்டும்.

6. இந்த உத்தரவால் அனுமதிக்கப்பட்ட காலவரையரைக்குள் கட்டிடம் கட்டி முடிக்கப்படாவிடில் அனுமதியை மீண்டும் புதியதாக மனு கொடுத்து அனுமதியை புதுப்பித்து கொள்ள வேண்டும்.

7. அனுமதிக்கும் வரைபடத்தில் கூடுதலோ அல்லது மாறுதல் ஏதேனும் செய்துகட்ட வேண்டுமானால் அதற்குரிய திருத்தப்பட்ட வரைபடங்களுடன் தலைவர் நிர்வாக அதிகாரிக்கு விண்ணப்பம் செய்து உத்தரவு பெற்ற பிறகுதான் மாறுதல் கட்டிடம் கட்டவேண்டும்.

8. கட்டிடம் கட்ட பொய்யான ஆவணங்கள் அளித்தது உண்மையென கண்டறியப்பட்டால், இந்த உத்தரவு இரத்து செய்யப்பட்டதாக கருதப்படும்.

9. புதியதாக கட்டப்படும் கட்டிட இடங்கள் எந்த நேரத்திலும் சுத்தமான பொது சுகாதாரக்கேடு விளைவிக்காத வகையில் வைத்து இருத்தல் வேண்டும்.

10. மனுதாரர் கட்டிடத்தை கட்டி முடித்த பின்பு இவ்வலுவலகத்திலிருந்து சான்றிதழ் பெற்ற பின்பே பயன்படுத்திட வேண்டும்.

11. இவ்வளாகத்தின் திட திரவ கழிவு மேலாண்மை மற்றும் குடிநீர் வசதிகள் தங்களது சொந்த செலவிலேயே மேற்கொள்ள வேண்டும்.

12. கட்டிடத்திலிருந்து வரும் கழிவுநீரை மனுதாரர் தன் சொந்த இடத்திற்குள்ளேயே நிறுத்தி வைத்து அவைகளை அப்புறப்படுத்தும் வகையில் வடிகால்வாய்களும் கழிவு நீர்த்தொட்டிகளும் அமைத்துக்கொள்ள வேண்டும்.

13. கட்டிடம் தொழிலகங்களுக்காகவோ அல்லது வேறு தொழிலாளர்கள் வேலை செய்ய வேண்டிய இடங்களுக்காகவோ கட்டப்படாமலிருந்தால் அவைகளுக்கு மாவட்ட சுகாதார அலுவலரிடமிருந்தும், தொழிலகங்களின் ஆய்வாளரிடமிருந்தும் மற்றும் உறுப்பினர் செயலாளர், மாமல்லபுரம் உள்ளூர் திட்டக்குழுமம் ஆகியோரிடமிருந்தும் அனுமதி பெற்றிருத்தல் வேண்டும்.

14. அங்கீகரிக்கப்பட்ட வரைபடங்களின்படியே கட்டிடம் கட்டி முடிக்கப்பட்ட பின்பு இவ்வூராட்சியிலிருந்து சான்றிதழ் பெற்றுக்கொள்ள வேண்டும்.

15. கட்டிட வேலை முடிந்த பின்போ அல்லது குடியேறிய பின்னரோ 15 தினங்களுக்குள் தனி அலுவலர் அவர்களுக்கு எழுத்து மூலமாக தெரிவிக்க வேண்டும்.

16. மனுதாரர் இவ்வலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்ட ஆவணங்களில் போலியானது என கண்டறியப்பட்டால் இவ்வுத்தரவு தானாக இரத்தானதாக கருதப்படும். மேலும் இவ்வுத்தரவு நீதிமன்ற தீர்ப்பிற்கு உட்பட்டதாகும்.

தனி அலுவலர் புதுப்பாக்கம் ஊராட்சி /
வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ)
திருப்போரூர்.

பெறுநர்

M/s.Sylvanus Builders & Developers Ltd.,
Rep By Mr.S.Ethiraj,
Pacifica Aurum Veeranam Road OMR,
Padur, Chennai – 600103.

நகல் - ஊராட்சி செயலர், புதுப்பாக்கம் ஊராட்சி. திருப்போரூர் ஊராட்சி ஒன்றியம்

Sylvanus Builders And Developers Ltd
Director / Authorised Signatory